# சைவசித்தாந்தம் கூறும் பதியும் அத்வைதம் கூறும் பிரம்மமும்

**துசியந்தன். வ**[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

*இந்திய மெய்யியல் வரலாற்றிலே சைவசித்தாந்தம் சிறப்பானதோர் இடத்தினைப் பெற்றுள்ளது எனலாம். அத்தகுதிப்பாட்டினை மெய்கண்ட சாத்திரங்களே பெற்றுத்தந்துள்ளன. அவை பதினான்கு ஆயினும் அவற்றிலே காணப்படும் கொள்கைகளில் வேறுபாடு காணப்படவில்லை என்பதுடன் அடிப்படைக் கொள்கைகளை விளக்குவதில் அவை தம்முள் ஒன்றுக்கொன்று விரிந்தும் சுருங்கியும் அமைந்தனவே தவிர கருத்து நிலையிலே மாறுபாடானவையல்ல. இதன் அடிப்படையில் சைவசித்தாந்தம் கூறும் பதி விளக்கமானது சங்கரர் கூறும் வேதாந்த பிரம்மம் பற்றிய கருத்துடன் எவ்வாறான வகையில் ஒப்பீட்டு அடிப்படையில் தொடர்புபடுவதாகக் காணப்படுகின்றது என்பதனை ஆராய்வதாக இந்த ஆய்வானது அமைகிறது. சைவசித்தாந்தம் கூறும் இறையிருப்பு, வேதாந்தம் கூறும் பிரம்மம் ஆகிய இரண்டிற்குமான ஒப்பீட்டுரீதியான தெளிவினை வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் ஆய்வுப்பிரச்சினையாகும். இதனைத் தீர்க்கக் கூடியவகையில் ஆய்வு நோக்கமானது கட்டமைக்கப்பட்டுள்ளது. வேதாந்த பிரம்ம நிறுவலைத் தெளிவுபடுத்தல் மற்றும் சைவசித்தாந்த பதியிருப்பினை ஆராய்தல் ஆகிய முதன்மை நோக்கங்களை அடிப்படையாக கொண்டுள்ளதுடன் ஆய்வு நோக்கத்தினை ஈடுசெய்யக்கூடிய வகையில் ஆய்வு வினாக்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாகஆய்வு முறையிலானது இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதுடன் ஆய்வுக்கான தரவுகள் அனைத்தும் அண்மைக்காலங்களில் வெளிவந்த ஆய்வுச்சஞ்சிகைகள், ஆய்வு நூல்கள், வருடாந்த இதழ்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டுள்ளன. வேதத்திற்கு உரை எழுதியவர்களுள் சங்கரரின் கருத்தானது முதன்மையானதாக நோக்கப்படுகின்றது. சங்கரரின் அத்வைதமானது ஆன்மா பிரம்மமாவதனைக் குறிப்பிட்டு நிற்கிறது. அதேபோல் சைவசித்தாந்தமானது பதியாகிய சிவனை அடைவதனை குறிப்பிடுகின்றது.*

**திறவுச்சொற்கள்:** பதி, பிரம்மம், அத்வைதம், சைவசித்தாந்தம், விடுதலை

[1]*மெய்யியல் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
thusivasanthan@gmail.com

**அறிமுகம்**

சைவசித்தாந்தம் கூறும் பதி அத்வைதம் கூறும் பிரம்மம் ஆகியவற்றின் ஒப்பீட்டுரீதியான பகுப்பாய்வு இவ்வாய்வின் அடிப்படை நோக்கமாகும். சைவசித்தாந்த தோற்றத்தின் அடிப்படைகளை நோக்கும் போது அதனை பதினான்கு சித்தாந்த நூல்களும் மெய்ப்பிக்கும் தன்மை கொண்டுள்ளன. சிவஞானபோதம் பன்னிரு சூத்திரங்களில் கூறிய கோட்பாடுகளையே பின் எழுந்த வழி நூல்களும், சார்பு நூல்களும் விரிந்துரைக்கின்றன. அவற்றிற்கு முன்னெழுந்த திருவுந்தியார், திருக்களிற்றுப்படியாரும் சைவசித்தாந்தச் சிறப்பு நூல்களில் காலத்தால் முற்பட்ட நூல்களாகும். இவை கி.பி 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. சிவஞானபோதமும் ஏனையவையும் கி.பி 13ஆம் நூற்றாண்டை ஒட்டியவையாகும். மெய்கண்டாரின் மாணவரில் ஒருவராகிய அருணந்தி சிவாச்சாரியார் சிவஞானசித்தியார், இருபா இருப.்.து என்ற நூல்களையும், உமாபதி சிவாச்சாரியார் சிவப்பிரகாசம் முதலிய எட்டு நூல்களையும் இயற்றினார்கள். உமாபதி சிவாச்சாரியாரின் எட்டு நூல்களும் சித்தாந்த அட்டகம் எனப்படும். மனவாசகம் கடந்தாரால் உண்மை விளக்கம் எழுதப்பட்டது. இப்பதின்னான்கு சாத்திரங்களும் சைவசித்தாந்தம் முதல், வழி, சார்பு நூல்களாயின. இவ்வாறாகச் சிவாகமங்களினாலும் பன்னிரு திருமுறை நூல்களினாலும் வளர்க்கப்பட்டு வந்த சைவசித்தாந்த மெய்யியல் கி.பி 13ஆம் நூற்றாண்டிலே திட்ட முறைப்படுத்தப்பட்ட (system) உருவமைப்பினைப் பெற்றது.

இதனடிப்படையில் சைவசித்தாந்தமானது மூன்று உண்மைகளை நித்தியப்பொருட்கள் எனக் கூறும். அவை பதி, பசு, பாசம் எனப்படும். இதனை “பதியினைப்போல் பசு, பாசம் அனாதி” எனத் திருமந்திரம் உறுதிப்படுத்தியுள்ளது. சைவ என்பது சிவ வழிபாட்டினையும் சுட்டி நிற்கின்றது. இவ்வாறு சைவசித்தாந்தம் காணப்படும்போது. சங்கரர் குறிப்பிடும் பிரம்மானது எவ்வாறு சைவ சிந்தாந்தம் பதியிருப்பினை ஏற்றுக் கொள்கின்றதோ அதனை போன்றே பிரம்மத்தின் இருப்பினையும் தெளிவுபடுத்தி நிற்பதனை நோக்க கூடியதாக உள்ளது. குறிப்பாக பிரம்மம் உயர் நிலையானது எனவும் அதனை அடைய முடியாதவகையில் மாயையானது தடுத்தாற் கொள்கின்றது என்னும் தன்மையினை தெளிவுபடுத்துவதாக சங்கரர் சுட்டும் அத்வைதமாக காணப்படுகின்றது எவ்வாறு சைவசித்தாந்தம் சிவன் ஒன்றே பதி என்கின்றதோ அதே போன்றே சங்கர வேந்தாந்தமும் உள்ள பொருள் ஒன்று அதுவே உண்மைப் பொருள் பிரம்மம் என்பதனை சுட்டி நிற்பதனை நோக்க கூடியதாக உள்ளது.

**பிரதான நோக்கம்**

சைவசித்தாந்தம் கூறும் பதி இருப்பும் சங்கரர் கூறும் வேதாந்த பிரமமும் ஆகியவற்றினை ஒப்பீட்டு ரீதியாக பகுப்பாய்வு செய்தலானது ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

**துணை நோக்கங்கள்**

1. சைவசித்தாந்தம் சுட்டும் உள்பொருள் உண்மையிளைை ஆராய்தல்.
2. வேதாந்தம் கூறும் அத்வைத உண்மையினை ஆராய்தல்.
3. சங்கரர் சுட்டும் மாயை பற்றிய கருத்தாக்கத்தினை ஆராய்தல்.
4. சைவசிந்தாந்தம் குறிப்பிடும் மாயையின் வெளிப்பாடுகளை ஆராய்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்புசார் ஆய்வாக விளங்குவதால் ஆய்வின் பிரதான எண்ணக்கருக்களினை முதன்மைப்படுத்தியதான 'Thematic Analysis' என்பதைப் பிரதான முறையியலாகக்கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவ்வாய்வில் ஒப்பீட்டாய்வு, விமர்சனப் பகுப்பாய்வு, விபரண முறை போன்ற முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

மெய்யியல், (2012), என்ற நூலானது ஞானகுமாரன் என்பவால் எழுதப்பட்டதாகும். இந்நூல் மூலம் சைவசித்தாந்தம் எவ்வாறான வகையில் பதி பற்றிய விளக்கத்தினை வெளிப்படுத்துகின்றது என்பதனைத் தெளிவுபடுத்துவதனை நோக்கக் கூடியதாக உள்ளது. இவ்விளக்கமானது இவ்வாய்வில் சைவ சித்தாந்த இறை இருப்பினை தெளிவுபடுத்துவதற்கு உதவுவதாக உள்ளது. சைவ சித்தாத்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி, (1998), என்ற நூலானது கந்தையா,மு., என்பவரால் எழுதப்பட்ட நூலாகும். இந்நூலானது சைவசித்தாந்தம் குறிப்பிடும் முப்பொருள் உண்மையினை தெளிவுபடுத்துவதனை நோக்க கூடியதாக உள்ளது. இதன்படி இவ்வாய்வில் முப்பொருள் உண்மைகளின் தெளிவினை பயன்படுத்த முடிந்ததுடன் மாயை பற்றிய கருத்தினை உட்படுத்த உதவுயுள்ளதனை நோக்க கூடியதாக உள்ளது.

சைவசித்தாந்தம் - ஓர் அறிமுகம், (2008), என்ற நூலானது கிருஸ்ணவேணி,ஏ.என்., என்பவரால் எழுதப்பட்டதாகும் இந்நூலானது சைவ சித்தாந்தம் மற்றும் சங்கர வேதாந்தம் ஆகிய இரண்டிற்குமான ஒற்றுமைப்பாட்டினை ஆய்வில் கட்டமைப்பதற்கு அடிப்படையாக அமைந்தாக இவ்வாய்வானது காணப்படுகின்றது. சந்தானாசாரியர் சரிதையும் சைவசித்தாந்த சாஸ்திரங்களும், (2008) என்ற நூலானது வேதநாதன்,மா., என்பவரல் எழுதப்பட்ட நூலாகும் இந்நூலானது இவ்வாய்வில் மாயை பற்றிய கருத்துக்களை ஆராய்வதற்கும் கட்டமைப்பதற்கும் அடிப்படையான நூலாக காணப்படுகின்றது

சித்தாந்த செழுமைப்புதையல்கள், (2005) என்ற நூலானது கந்தையா,மு., என்பவரால் எழுதப்பட்ட நூலாகும். இந்நூலானது வேதாந்த விளக்கங்கள் மற்றும் வேதாந்தம் எவ்வாறான

பண்புகளைக் கொண்டுள்ளன, அப்பண்புகளை எவ்வாறு சங்கரர் பயன்படுத்தியுள்ளார் என்பதனைத் தெளிவுபடுத்துவதாக இவ்வாய்வானது காணப்படுகின்றது. முப்பொருள் விளக்கம், (1995) என்னும் நூலானது குமாரசுவாமிக்குருக்கள்,ச., என்பவரால் எழுதப்பட்ட நூலாகும். இந்நூலானது பதியிருப்பு நிறுவல்களை சைவசித்தாந்தம் நோக்கில் தெளிவுபடுத்தி நிற்பதனை நோக்க கூடியதாக உள்ளது. இந்நூலானது இவ்வாய்வில் பதியிருப்பு நிறுவல்களை ஏனைய புத்தகங்கள் கூறும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளது.

சித்தாந்த சங்கிரகம், (2011) என்னும் நூலானது திருமுருகன்,ஆறு., என்பவரால் பதிப்பிக்கப்பட்ட நூலாகும். இந்நூல் மூலம் வேதாந்த அத்வைதத்தில் பிரம்மநிலையினை ஏன் மானிடர்கள் அடைய முடியாமல் உள்ளார்கள் என்பதற்கான தெளிவினை நோக்கக் கூடியதாக உள்ளது. இந்நூலின் பயன்பாடானது ஆய்வில் பிரம்ம நிலைகளின் முக்கியத்துவத்தினைத் தெளிவாக விளக்க உதவியதாகக் காணப்படுகின்றது.

**பதியிருப்பு நிறுவல்கள்**

"பதி" என்பது கடவுளைக் குறிக்கும். சித்தாந்தக் கடவுள் "சிவம்"எனச் சிறப்பிக்கப்படும். சிவம் என்பது அறிவே வடிவானது, ஞானமயமானது. "அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே" என்கிறார் மாணிக்கவாசகர். கடவுள் என்பதில் "கட" என்றால் உலகினையும், உயிர்களையும் கடந்தவன், "உள்" என்றால் உலகினுள்ளும் உயிர்கட்குள்ளும் உறைபவன். எனவே கடந்தும், கரந்தும் உள்ளவன் கடவுளாகின்றான். ஆன்மாக்களை ஆண்டு கொள்பவன் ஆண்டவன். சகலவிதமான "இறைமை" எனும் சர்வ அதிகாரமும் உடையவன் இறைவன். ஈசன், அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானவன். "அன்பே சிவமாய் அமர்ந்திருப்பவன்". "கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகி" நிற்பவன். காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் ஈசன். இத்தகைய மகிமை பொருந்திய பரம்பொருளானவர், சித்தாந்தத்திலே யாவற்றையும் கடந்தவராக எல்லாவற்றையும் தன் சக்தியால் இயக்குபவராகச் சிவன் எனப் பெயர் பெறுகிறார். அவர் எந்தப்பொருளின் எல்லையிலும், எந்த நாட்டின் சகல யோகங்களின் எல்லையிலும் அடங்குபவரல்லர். அதனால் "தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனான பெருமை" உடையவர்.

"அறிவு அறிவென்ற பதியும் அனாதி" என்றது திருமந்திரம். "ஆன்றதோர் தொல்பதி" என்றார் கச்சியப்பர். எனவே இத்தகைய பதி சித்தாந்தப் பொருளாக விளங்குமாற்றலை "பதி பரமேயது தான்" எனும் சித்தாந்தப் பாடலும் சிறப்பித்தது. அதனால் "அந்தம் ஆதி என்மனார்

புலவர்” எனவும் “ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி” எனவும் உலகிற்கு அடிப்படையான இறைவனைச் சித்தாந்தம் விளக்கியுள்ளது.

“ஒருவனோடொருத்தி யொன்றென்றுரைத்திரு முலகமெல்லாம்” என அருணந்திசிவாச்சாரியார் கூறுகின்றார். அதாவது உலகமானது தோன்றி நின்று ஒடுங்கும் தன்மையுடையதாக விளங்குகின்றது. இவ்வாறு உலகைத் தோற்றுவித்து, நிலைபெற வைத்து ஒடுக்குவதற்குத் தனக்கு ஒரு முதல்வனின்றித் தானே காரணமாய் ஒரு கருத்தா வேண்டப்படுவதாகின்றது. அவனே இறைவன் என இறை இருப்பு நிறுவப்படுகின்றது. அதாவது பூரணனான இறைவன் அழிக்கக்கூடிய உலகினை எவ்வாறு தோற்றுவிக்க முடியும். இதற்காக தனது சக்தியான மாயையைக் கொண்டு உலகினை தோற்றுவிக்கின்றார். உலகமானது மாயையில் தோன்றி மாயையிலேயே உள்ளடங்குகின்றது. இதற்கு காரணம் ஆன்மாவின் பாச முனைப்பாகும். உலகு சுட்டியறியப்படுகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. சுட்டறியப்படும் எல்லாப்பொருளும் அசத்துப்பொருளாம். அவை தோன்றி நின்று மறைந்து விடும். இவை நிலையானவை அல்ல மாற்றம் அடையக்கூடியது. பூரணமானது அல்ல. எனவே இவற்றை ஒழுங்குபடுத்த ஒருவர் வேண்டும். அவர் மாற்றமுறாதவராக இருக்க வேண்டும்.

மாறாத் தன்மையை வெளிப்படுத்துபவனாய் ஒருவன் வேண்டும், அவனே இறைவன். மேலும் சைவசித்தாந்தம் அடிப்படைக் கருத்துக்களாக கர்ம வினைகளை முதன்மைப்படுத்துகின்றன. அதாவது ஆன்மாக்கள் செய்த வினை, செய்யப்போகின்ற வினை, செய்கின்ற வினை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆன்மாக்களுக்கு மறுபிறப்பு உண்டா? இல்லையா? எனத் தீர்மானிப்பதற்கு ஒருவன் தேவை. எனவே நாம் செய்த நல்வினை, தீவினை அடிப்படையில் ஆன்மாக்களுக்கு உடலைக் கொடுக்க ஒருவன் தேவை அவனே இறைவன்.

இவ்வுண்மையினை மெய்கண்டார் கூறும் போது,

“அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையினீக்க மின்றிநிற்கு மன்றே” (சிவஞானபோதம்: 2)

என உரைத்தல் காணலாம்.

மேலும் “உள்ளது போகாது இல்லது வராது”. அதாவது உள்ளது இல்லது ஆகாது அதே சமயம் இல்லாதது வராது இங்கு எவ்வாறு உலகினை இறைவன் தோற்றுவிக்கின்றான் என்றால் இறைவன் - நிமித்த காரணம், மாயை – முதற்காரணமாகக் கொண்டு உலகை தோற்றுவிக்கின்றார். இவ்வாறே ஆன்மாவின் வினைகளைப் பிரித்தளிப்பதற்கு ஒருவன்

அவசியம். அவன் நிமித்த காரணமான இறைவன் ஆகின்றான். பிரபஞ்சத்தின் தோற்றம் மூலம் இறைவனின் இருப்பு நிலைநிறுத்தப்படுகின்றது.

“போக்கு வரவு”, பிறப்பு, இறப்பு இதற்கு ஆணையிடுபவர் ஒருவர் அவரே இறைவன் ஆவான் என இறைவன் இருப்பு நிறுவப்படுகின்றது.
சிவஞானசித்தியார் கூறும் போது

“இருவினை யின்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்திருந்து
வருவது போவதாகு மன்னிய வினைப் பயன்கள்
தருமரன் றரணியோடு தராபதி போலத்தாமே
மருவிடாவடிவங் கன்மங்பலன்களு மறுமைக் கண்ணே” (சிவஞான சித்தியார்: 94)

அதாவது நாம் செய்யும் வினைப்பயனின் அடிப்படையிலே இன்பதுன்பம், இறப்புப்பிறப்பு என்பன தீர்மானிக்கப்படுகின்றன. இதைத் தீர்மானிப்பவர் இறைவன். இறைவன் ஏன் மாயையை அடிப்படையாகக் கொண்டு உலகினை தோற்றுவிக்கின்றார் எனில் சித்துப்பொருளிலிருந்து சடப்பொருள் உருவாக முடியாது என்பதற்காகவே பதியானவர், மாயையினைக் கொண்டு உலகினை உருவாக்குகின்றார்.

இதனை மட்குடத்தின் தோற்றத்துடன் ஒப்பிடும் போது உலகின் தோற்றத்திற்கு முதற்காரணம் இறைவன், நிமித்த காரணம் மாயை. அதேபோல் மட்குடத்தின் தோற்றத்திற்கு முதற்காரணம் மண், நிமித்த காரணம் குயவன் எனக் கொள்ளப்படுகின்றது. எவ்வாறு குயவன் இல்லாது பானை வராதோ அதேபோல் உலகின் தோற்றத்திற்கு இறைவன் நிமித்த காரணமாக இருந்து கொண்டு மாயை நிமித்த காரணமாக கொண்டு உலகினைத் தோற்றுவிக்கின்றார். எவ்வாறு இறைவனின் சக்தி என்பது உலகின் தோற்றத்திற்கு துணைக்காரணமாக உள்ளதோ அதேபோலவே திரிகை என்பது பானையின் தோற்றத்திற்கு குயவன் போல் உலகின் தோற்றத்திற்கு இறைவன் காரணமாக உள்ளான்.

**சைவசித்தாந்தத்தில் பதி என்பதனை வேதாந்த பிரம்மத்துடன் ஒப்பிடல்**

இதனடிப்படையில் சைவசித்தாந்தம் தன் நிலையில் முப்பொருள் உண்மையினை ஏற்றுக்கொள்கின்றது. அவை பதி, பசு, பாசம் என்பனவாகும். எனினும் இவற்றிற்கு மூலப்பொருளாக பதியே உள்ளான் என சைவசித்தாந்தம் எடுத்தாளுகின்றது. அதனை இறைவனின் இரு நிலைகளைக் கொண்டு நோக்கப்படுகின்றது. அதாவது

1. சொரூப நிலை
2. தடத்த நிலை

பொதுவில் இறைவன் உயர்வானவரும் முழுநிலைக்குரியவருமாவார். இங்கு இறைவன் தனிநிலைக்குரியவரோ அன்றேல் தனிநிலை கடந்தவரோ எனும் கேள்வி எழுவதுண்டு. இந்து

சமயத்தில் பௌதிக அதீத நிலை சார்ந்த வகையில் இறைவன் தனிநிலை கடந்தவராகவும் முதன்மைக்குரிய நிறைவானவராகவும் எடுத்தாளப்படுகின்றார். வேத, உபநிடதங்கள் இறைவனைப் பிரம்மம் என அழைக்கின்றன. குண இயல்பு கடந்த, உயர்வான பரம்பொருளாய் விளங்குகையில் நிஷ்பிரபஞ்சநிலை எனவும் குறிப்பிட்ட குண இயல்புகள், சிறப்பியல்புகள் இணைந்த நிலையில் சப்பிரபஞ்சநிலை எனவும் அழைக்கப்படுகின்றார். சப்பிரபஞ்சநிலையில் தெய்வீக நிலைக்குரியதாயும் தனிநிலை சார்ந்ததாயும் வழிபாட்டிற்குரியதாயும் அமைகிறது. அத்வைதத்தினை போதித்த சங்கராச்சாரியார், இவற்றை முறையே நிர்குணப்பிரம்மம், சகுணப்பிரம்மம் என எடுத்தாளுதல் நோக்கத்தக்கது. இதனை பெரிதும் ஒத்த அடிப்படையினைக் கொண்டதாகச் சொரூபநிலை, தடத்த நிலையென இரண்டாகச் சைவசித்தாந்தமும் எடுத்தாள்வது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதன் அடிப்படையில் சங்கரர் எடுத்தாளும் நிர்குணபிரமமானது சைவசித்ததாந்தம் எடுத்தாளும் சொரூப நிலையுடன் தொடர்புடைதாகவும், அதேசமயம் சகுணப்பிரம்மமானது சித்தாந்தத்தின் தடத்தநிலையுடன் சமப்படுத்தும் தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது. சைவசித்தாந்தத்தில் சொரூப நிலையினைப் போல் உயரிய இறைவனாக, குணம் குறி அற்றவனாக நிர்குணபிரம்மானது காணப்படுவதாக உள்ளது. அதேபோல் குணம், குறிகள் கூடிய நிலையில் சைவசித்தாந்தத்தின் தடத்தநிலையினைப்போல் சங்கர வேதாந்தத்தில் சகுணபிரம்மமானது காணப்படுகின்றது எனலாம். எனவே கடவுளின் இருப்பு என்பது வேதாந்தம், சித்தாந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்படுள்ளன.

பதியே இவ்வுலகத்தில் முதற்காரணமாய் நின்று படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல், அழித்தல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்கின்றான் என்பதன் அடிப்படையிலும், ஆன்மாக்களின் கர்ம வினைகள் அடிப்படையில் ஆன்மாக்களுக்கான கரணங்களை (உடல்) தோற்றத்தை பகிர்ந்தளிப்பதற்கு ஒருவராக "பதியே" உள்ளான் எனச் சைவசித்தாந்தம் எடுத்தாளுகின்றது. இதனடிப்படையில் சைவசித்தாந்தம் "பதி" ஆகிய சிவனின் இருப்பினை நிறுவுவதுடன் ஏற்றுக்கொண்டுள்ளது.

அதேபோல் வேதாந்தங்கள் அனைத்திலும் சைவசித்தாந்தம் பதிக்கு கொடுப்பது போன்ற முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் உபநிடதங்களுக்கு உரை எழுதியதன் மூலம்

சங்கரர் - அத்வைதத்தையும்

இராமானுஜர் - விசிட்டாத்வைதத்தையும்

மத்துவர் - துவைதத்தையும் முன்வைத்தனர்.

அதாவது எவ்வாறு சைவசித்தாந்தம் முப்பொருள் உண்மையினை ஏற்றுக்கொண்டதோ அதேபோல வேதாந்தங்களும் தமக்கிடையே வேறுபட்ட வகையில் உண்மைத்தன்மைகள் என சிலவற்றை ஏற்றுக்கொண்டுள்ளன.

**சங்கரர் எடுத்தாளும் அத்வைதம்**

சங்கரர் தனது அத்வைத நிலையில் உண்மைப்பொருள் ஒன்று மட்டுமே ஏனைய அனைத்தும் தோற்றப்பொருட்கள் என்கிறார். இவை தோற்றப்பொருட்களாக தோன்ற மாயையே காரணம். எனவே மாயையே தனது சக்தியால், உள்ள பொருளான பிரம்மத்தை மறைத்து இல்லாத பொருளான உலகு, ஆன்மா என்பவற்றை தோற்றுவிக்கின்றன. எனவே பிரம்மமே உண்மைப்பொருள் ஏனையவை தோற்றங்களே.

மாயை தனது சக்தியால் தோற்றப்பொருட்களை உருவாக்கி பிரம்மத்தை மறைப்பதனால் பிரம்மம் இல்லை என்ற முடிவுக்கு வரமுடியாது. எனவே சைவசித்தாந்தம் முதன்மைப்பொருளாகக் கொள்ளும் பதியிற்கு சமனாக சங்கரவேதாந்தத்தில் பிரம்மம் எடுத்தாளப்படுகின்றது எனலாம்.

சைவசித்தாந்தத்தில் பதியை அடைவதற்கு ஆணவம் தடையாக உள்ளது போல் சங்கரவேதாந்தத்தில் ஆன்மாக்கள் தாம் பிரம்மம் என்பதை அறிவதற்குத் தடையாக மாயை உள்ளது. அதாவது சந்திரனானது பிரகாசிக்கும் போது அதன் ஒளியானது குளம், குட்டை, ஏரி, கிணறு போன்ற பல நீர் நிலைகளில் விம்பங்களாக பிரதிபலிப்பதனைக் காணலாம். ஆனால் சந்திரன் உண்மையில் ஒன்றே. அதன் ஒளிப்பரம்பல்களினாலேயே அவ்வாறான காட்சிகள் தெரிகின்றது. அவ்வாறே பரமாத்மா ஒன்றேயாகும். அதுவே உண்மை பிரம்மம். ஆனால் மாயையின் சக்தி காரணமாக பல ஜீவாத்மாக்களாகத் தோன்றுகின்றன. எனவே சங்கரரின் கருத்துப்படி, மாயையின் ஆற்றலாகிய அறியாமை விலகி, பிரம்மம் என்னும் பரமாத்மாவாக ஆன்மாக்கள் மாறுகின்றன. எனவே ஆன்மா ஒன்றே. அதுவே பிரம்மம் என்கின்றார் சங்கரர். இவ்வாறான மாயை நீக்கத்தினை அடைந்து பிரம்மத்தை உணரும் நிலையினையே சங்கரர் முக்தி, விடுதலை என்கின்றார். இதன் அடிப்படையில், ஆன்மாக்கள் பிரம்மம் என்னும் உயரிய நிலையினை அடைகின்றன.

சைவசித்தாந்தத்தில் பதியானது மேலான உண்மைப்பொருளாகவே உள்ளது. இங்கு பதியினை உணர முடியாது ஆணவ மலம் உயிரின் அறிவினை மறைத்து நிற்கின்றது. சைவசித்தாந்தத்தில் மாயை உயிரின் அறிவினை விளக்குகின்ற பொருளாக உள்ளது.

இதனை,

"விடிவா மளவும் விளக்கனைய மாயை வடிவாதி கன்மத்து வந்து" (திருவருட்பயன்: 30)

விடிகின்ற வரைக்கும் விளக்கானது துணைசெய்செய்வது போன்று ஆன்மா வீடுபேறு அடைகின்ற வரைக்கும் மாயாகாரியப் பொருட்கள் உயிர்க்கு துணைசெய்கின்றது.

சைவசித்தாந்தம் கூறும் பதி பற்றியும் வேதாந்தம் கூறும் பிரம்மம் பற்றியும் ஒப்பிட்டு நோக்கும் போது வேதாந்தம், சைவசித்தாந்தம் எனும் இரண்டும் பதி அல்லது பிரம்ம உண்மையினை ஏற்பதோடு அதனை அடைவதையே தமது இறுதி இலக்காகவும் கொள்கின்றன.

**விமர்சன ரீதியான அணுகுமுறை**

சைவசித்தாந்தம் "பதி" பற்றிய கருத்துக்கள் தருக்க ரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் உள்ளது. எனினும் சங்கர வேதாந்தம் பிரம்மத்தினை முதன்மைப்படுத்துவதுடன், அவர் முன்வைக்கும் கருத்து நிலைகள் ராமானுஜர், மத்துவர் ஆகியோரின் கருத்துக்களோடு முரண்படுவதாகக் காணப்படுகின்றன. அதேவேளை சைவ சித்தாந்தம் ஏற்பதைப் போல் இராமானுஜர், மத்துவர் வேதாந்தமும் முப்பொருள் உண்மையினை நிலையினை ஏற்றுக்கொள்கின்றன. சைவசித்தாந்தம் இறையியல் இருப்பினை பௌதீக அதீத அர்த்தத்திற்கு அப்பாற்பட்ட உண்மை நிலை என எடுத்துக்காட்டும் அளவிற்கு வேதாந்தம் எடுத்துக்காட்டத் தவறியுள்ளது. எனினும் சங்கரா் பிரம்மத்தினை வெளிப்படுத்துவது தருக்கநிறுவலுடன் கூடியதாக அமைந்தாலும் அனைத்திற்கும் முதன்மையாகக் கருதுவது மாயை என்னும் அறியாமை ஆகும். ஆனால் சைவ சித்தாந்தம் ஆணவத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது.

மாயையை அடிப்படையாகக் கொண்டு சங்கரர் பிரம்மத்தின் நிலையைக் குணம், குறிகள் எதுவும் இல்லாத உயர்ந்த நிலையாக எதிர்மறையில் விளக்கி நிற்பதைக் காணலாம். சைவசித்தாந்தத்தில் சொரூப நிலையானது இறைவனின் உயரிய நிலையினைக் குறித்து நிற்கின்றது. இந்நிலையானது சங்கர வேதாந்தத்தின் நிர்க்குண பிரம்ம நிலைக்குச் சமமாக உள்ளது. இதனடிப்படையில் சைவசித்தாந்தத்தில் பதி பற்றிய கருத்துக்கள் நோக்கப்படுவதைப்போல் சங்கர வேதாந்தத்தில் பிரம்மம் பற்றிய கருத்துக்கள் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

மனித வாழ்க்கை சிறப்புறுவதற்கும், பல ஆற்றல்கள் வெளிப்படுவதற்கும் சமய உணர்வு வெளிப்படுவதற்கும் சிறந்துயா்ந்த பண்புகள் வெளிப்பட்டு மேலோங்கித்

திகழ்வதற்கும் தெய்வம் உண்டு என்ற நம்பிக்கை அடிப்படையாகின்றது. சமய உணர்வில்லாத ஒருவன் வேறு பிற துறைகளில் எவ்வளவுதான் சீரும், சிறப்புமுற்று விளங்கினாலும் சமய உணர்வும், தெய்வ நம்பிக்கையும் உடைய ஒருவனின் முன்னிலையில் சிறிது தாழ்ந்தே நிற்பான். சீரற்றவனிடம் இல்லாத விசேட பண்பு சீர் உள்ளவனில் மிகையாக உள்ளதை காணலாம்.

"சிவன் அரு உருவும் அல்லன்
சித்தினோடு அசித்தும் அல்லன்
பவம்முதல் தொழில்கள் ஒன்றும்
பண்ணிடு வாளும் அல்லன்
தவமுதல் யோக போகம்
தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இயைந்தும் ஒன்றும்
இயைந்திடா இயல்பினானே!"

இவ்வாறு சைவசித்தாந்தத்தைப் பொறுத்தவரையில் முப்பொருள் உண்மைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும் பதியை முதன்மைப்படுத்துவதற்கு அடிப்படைக்காரணம் சிவனின்றி அணுவளவும் அசையாது என்பதனாலே ஆகும். எனவே சித்தாந்தத்தின் கருத்தின்படி பதி என்னும் சிவன் எங்கும் நிறைந்தவன் ஆகவும், எல்லாம் வல்லவன் ஆகவும் காணப்படுகின்றான். இதே நிலைப்பாட்டினையே சங்கர வேதாந்த பிரம்மம் பற்றிய கருத்தாக்கங்களும் அமைந்துள்ளன. ஆனால் பதி அல்லது பிரம்மத்தை அடையும், உணரும் முறைகளிலே வேறுபாடுகள் காணப்படுகின்றது. எது எவ்வாறாயினும் சித்தாந்தமாயினும் சரி, வேதாந்தமாயினும் சரி காரண காரிய கோட்பாட்டின் அடிப்படையில் காரணத்திற்கு காரியமாய் பதி எங்கும் நிறைந்துள்ளான் என்பதே முடிவாகும்.

## உசாத்துணை

அருணந்திதேவனார், ஸ்ரீ., (1955), மெய்கண்டசாஸ்திரம், மீனாட்சி சுந்தம் பிள்ளையார்.

அருணாச்சலம், (2004), சைவசமயம் ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம்.

ஆனந்தராசன், நா., சிவஞானபோதம் வழித்துணை விளக்கம்.

இராமணாதன், க., (1998), சைவசித்தாந்த மெய்ப்பொருளியல், காந்திகேயன் லிமிட்டட்.

கந்தையா, மு., (1998), சைவ சித்தாத்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கந்தையா, மு., (2005), சித்தாந்த செழும் புதையல்கள், ஈழத்து சித்தாந்த சைவ வித்தியாபீடம்.

கிருஸ்ணவேணி, ஏ.என்., (2008), சைவசித்தாந்தம் - ஓர் அறிமுகம், சேமமடு பதிப்பகம்.

குணபாலசிங்கம், த., (2004), சைவசித்தாந்தமும் விஞ்ஞானமும், பி.வி.ஆர் ஸெட், சென்னை.

குமாரசுவாமிக்குருக்கள், ச., (1995), முப்பொருள் விளக்கம், சரஸ்வதி வித்தியா சாலை.

ஞானகுமாரன், நா., (2012), மெய்யியல், சேமமடு புத்தகசாலை, கொழும்பு.

திருஞானசம்மந்தம்பிள்ளை, மு., (1993), சைவ சித்தாந்த விளக்கம், சைவ சித்தாந்த வெளியீட்டகம்.

திருமுருகன், ஆறு., (2011), சித்தாந்த சங்கிரகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

வரதராஜன், க., (1993), திருமந்திரம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-600014.

வேதநாதன், மா., (2008), சந்தானாசாரியர் சரிதையும் சைவசித்தாந்த சாஸ்திரங்களும், சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்.